(அஅ) மதுராந்தகம் வட்டத்தில் ஏரிகள் பழுதுபார்க்கப்படாமை

*திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, மதுராந்தகம் வட்டத்தில் புயலின் காரணமாக 200-க்கு மேற்பட்ட ஏரிகள் உடைபட்டு, இன்னும் முழுதுமாக பழுது பார்க்கப்படாததால், இந்த ஆண்டு பருவ மழைக்குள் பழுது பார்க்க வேண்டிய நிலைமை பற்றி அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, செங்கல் பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் புயலினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த பாசன ஏரிகளை விரைவில் பழுது பார்ப்பதன் அவசியத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது.

இம்மாநிலம் 1966-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 3, 10, 28 ஆகிய நாட்களில் வீசிய சூறாவளிப்புயலினால் பாதிக்கப்பட்டு மிகுதியான மழை, கடும் புயல் ஆகியவற்றின் காரணமாக அநேக பாசன ஏரிகள் பழுதுற்று உடைப்பெடுத்தன. வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் தான் பெரும்பாலும் ஏரிகள் சேதமடைந்தன. 1966-ஆம் ஆண்டு 3-ம் நாள் முதன் முதலாக புயல் வீசியதும் நடப்புபாசன பருவத்திற்கு தண்ணீரைத் தேக்குவதற்காக உடைந்த இடங்களில் சுற்றுக்கரைகள் கட்டு வதற்கு அண்டைக் கோட்டங்களில் இருந்து பணியாளர்களை வேலை மேற் கொள்ளச் செய்து உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உடைந்து சேத மடைந்த ஏரிகளை நன்னிலைக்கு கொண்டு வருவதற்காக வெள்ள நிவாரண சிறப்பு வட்டம் ஒன்று அமைக்கப்பட்டு அவை பழுது பார்க்கும் வேலைகளை விரைவில் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

புயலின் விளைவாக செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இன்றையவரை அரசுக்கு கிடைக்கப்பட்ட புள்ளி விவரப்படி பாதிக்கப்பட்ட மொத்த ஏரிகள் 1,999. இவ்வேரிகளில் 521 ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டன. 1,478 ஏரிகள் பாதிக்கப்பட்டன. இவ்வேலைகளை பழுதுபார்ப்பதற்கும் முன் நிலையில் கொண்டுவருவதற்கும் நடப்பு ஆண்டிற்கு ரூபாய் 125 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மதுராந்தகம் வட்டம் பொருத்த வரையில் 194 ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளன. இவ்வேரிகள் அனைத்திலும் பழுது பார்க்கும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதுராந்தகம் வட்டத்தில் உடைப்புகள் ஏற் பட்ட ஏரிக்கெல்லாம் 1966-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிவுக்குள் சுற்றுக் கரைகள் கட்டப்பட்டது. 11-7-1967-ல் இவ்வரசுக்கு கிடைத்த தகவல்கள்படி 77 உடைந்த ஏரிகளில் பழுது பார்க்கும் வேலை முடிவடைந் துள்ளது. மீதியுள்ள 117 ஏரிகளிலும் வேலை விரைந்து முன்னேறி வருவதாகவும் தெரியவருகிறது. மேலும் இவ்வட்டத்திலுள்ள பாதிக்கப் பட்ட 331 ஏரிகளில் 59 ஏரிகளில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. எஞ்சிய 272 ஏரிகளில் பழுது பார்க்கும் பணிகள் அண்மை யில் மேற்கொள்ளப்படும். இப்பணிகளில் விரைவில் முடிவடையும் பொருட்டு பெரும்பாலானவை உள்ளூர் ஆயக்கட்டுக்காரர்களிடமே வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளன. அடுத்த பாசனப் பருவத்தில் ஏரிகளில் முழு அளவு நீர்த்தேக்கம் நிலையை அடைய வடகிழக்கு பருவமழை காலத்திற்கு முன்பே ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகளை பழுது பார்த்து தன் நிலைக்குக் கொண்டுவர பொறியியல் பணித்துறை ஆவன செய்யுமாறு அரசு பணித் துள்ளது. கரையை உறுதிப்படுத்துதல், கல் பாவுக்கரை அமைத்தல் போன்ற பிற செப்பனிடு வேலைகள் 1968-69 ஆகஸ்டு இறுதிக்குள் முடிக்கும் நோக்கத்துடன் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்களுடைய கவன ஈர்ப்பு அறிவிக்கைக்கு அமைச்சரவர்கள் பதில் அளித்தவுடன் அவர் ஒரு விளக்க வினா கேட்க விரும்பினார். இப்போது அதைக் கேட்பதற்கு அழைக்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கூட்டுறவு ஸ்டோர் அந்த 150 டன் ரசாயன உரத்தை எடுக்கவில்லை என்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த கூட்டுறவு ஸ்டோரின் நிதி நிலை சரி இல்லை என்பதும் இங்கே கண்டிருக்கிறது. ஆகவே தனிப்பட்டவர்கள் யாராவது அந்த யூரியா ரசாயன உரங்களை பணம் கட்டி எடுத்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய முன் வந்தால் அரசாங்கம் அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கோரிக்கையை மாவட்ட கலெக்டருக்கு தெரிவித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பூபதி அவர்கள் ஒரு விளக்க வினா போட வேண்டும் என்றார்கள். அவருக்கு நான் அனுமதி அளிக்க இருந்தேன். அவர் இடத்தில் இல்லாததால் அவர் வந்த பிறகு அனுமதிக்கிறேன்.

7. உரிமைக் குழுவின் அறிக்கை

சிதம்பரநாத நாடார்மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினைமீது குழுவின் பரிந்துரை

புலவர் கா. கோவிந்தன் : (உரிமைக் குழுவின் தலைவர்).—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்கள் பேரவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்கு பற்றி, 17–7–1967-ஆம் நாளன்று இப்பேரவைக்கு அளிக்கப்பட்ட உரிமைக் குழுவின் அறிக்கை, சட்டப் பேரவையின் 191 (பி) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவின் அறிக்கை இப்பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்கிற தீர்மானத்தை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்கிறதா என்பது கேள்வி. ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப் பேரவையின் 191 (டி) விதியின் கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்ளுகிறது'' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக்குழுவின் பரிந்துரைகளை இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறதா என்பது கேள்வி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

8. அரசினர் மசோதா

இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967), 1967)

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும் 8 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இக்கூட்டு ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட இப்பேரவையின் உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

1. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.
2. திரு. ஆலடி அருணா.